அந்நாளிலே பிரமாணம் வெகுதூரம் பரவிப்போம். மீகா 7:11

# கிருபையின் மன்னா!

மன்னா – 2 மே – 2018 மலர்–17

# சபைக்குத் தேவன் தரும் மன்னா

## ஊற்றுத் தண்ணீர்

"அங்கேயிருந்து பேயேருக்குப் போனார்கள்; ஜனங்களைக் கூடிவரச்செய், அவர்களுக்குத் தண்ணீர் கொடுப்பேன் என்று கர்த்தர் மோசேக்குச் சொன்ன ஊற்று இருக்கிற இடம் அதுதான். அப்பொழுது இஸ்ரவேலர் பாடின பாட்டாவது: ஊற்றுத் தண்ணீரே, பொங்கி வா; அதைக் குறித்துப் பாடுவோம் வாருங்கள்" (எண்ணாகமம் 21:16,17).

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தர வழியாகப் பிரயாணம் பண்ணினார்கள். அவர்களுடைய பிரயாணத்தை நாம் நம் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஒப்பிடலாம். அவர்கள், வாக்குப்பண்ணப்பட்ட கானான் தேசத்தை நோக்கி நடந்தது போன்றே, நாமும் தேவனால் நமக்கு வாக்குப் பண்ணப்பட்ட பரம கானானை நோக்கி, ஆவிக்குரிய பிரயாணத்தைத் தொடர்கிறோம்.

இஸ்ரவேல் மக்கள் பிரயாணம் பண்ணி, பேயேர் என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தனர். அங்கு ஒரு ஊற்று காணப்பட்டது. "ஜனங்களைக் கூடிவரச் செய், அவர்களுக்குத் தண்ணீர் கொடுப்பேன் என்று கர்த்தர் மோசேக்குச் சொன்ன ஊற்று இருக்கிற இடம் அது தான்" என்று எண்ணாகமம் 21:16இல் வாசிக்கிறோம். அப்படியானால், ஜனங்களின் தேவைக்குத் தண்ணீர் கிடைக்கும் ஊற்றைக் குறித்துத் தேவன் ஏற்கனவே மோசேயிடம் கூறிவிட்டார் என்பது தெளிவாகிறது. பேயேரிலிருந்த ஊற்றானது, தேவனாகிய கர்த்தரே என்பதை நினைவில் கொண்டு அந்த ஊற்றைக் குறித்துத் தியானிப்போம்.

எண்ணாகமம் 21:16இல் கூறப்பட்டுள்ள ஊற்றுத் தண்ணீர் மூன்று காரியங்களைக் குறிக்கும். அவை:

1. இரட்சிப்பு – Salvation
2. ஜீவன் – Life
3. பரிசுத்தமாகுதல் – Sanctification

## 1. இரட்சிப்பு — Salvation

ஆதியிலே தேவன் ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டித்து, அவர்களை ஏதேன் தோட்டத்தில் வைத்தார். தாம் உண்டாக்கின மனிதனோடு அனுதினமும் பேசி, உறவு கொள்ள விரும்பினார். ஆனால், அவ்விருவரும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் சாத்தானுக்குச் செவிகொடுத்து, பாவத்தில் வீழ்ந்தனர். அதன் விளைவாக, அவர்களுடைய சந்ததிகள் யாவரும் பாவத்திலே மரித்தவர்களாய்ப் பிறந்து வாழ்ந்தனர். ஆகையால், தேவன் மனுக்குலத்திற்குப் பாவபரிகாரத்தை ஏற்படுத்தினார். அது என்னவெனில், தேவகுமாரனாகிய இயேசுவே மனிதனாகப் பிறந்து, பாவத்திற்குப் பிராயச்சித்தம் செய்யும்படி இரத்தஞ்சிந்தி மரிக்க வேண்டுமென்பதே. மரித்த இயேசு உயிர்த்தெழுந்து, தம் பிதாவாகிய தேவனிடத்திற்குப்போய், நமக்காகப் பரிந்து பேசுகிறார். பாவமில்லாத இயேசு, நம் பாவங்களைத் தம்மேல் ஏற்று மரித்து, பாவத்திலிருந்து நமக்கு விடுதலையளித்திருக்கிறாரன்றோ? அதுதான் இரட்சிப்பு. இயேசு, தேவகுமாரனும் மனுமக்களைப் பாவத்திலிருந்து மீட்கும் இரட்சகருமாயுள்ளார். பேயோரில் தேவனால் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஊற்று, நாம் ஈவாகப் பெற்றுக்கொள்ளும் இரட்சிப்புக்கு அடையாளமாகக் காணப்படுகிறது.

இயேசு இவ்வுலகில் மனிதனாக வாழ்ந்தபோது, பாவத்தில் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு தனிநபரைத் தேடிச்சென்று, இரட்சிப்பின் ஊற்றுக்கு வழிநடத்தினதைக் குறித்து வேதத்தில் வாசிக்கிறோம். இயேசு, பிரயாணத்தினால் களைப்படைந்தவராய் ஒரு கிணற்றருகே உட்கார்ந்தார் (யோவான் 4:6). அப்பொழுது, அக்கிணற்றில் தண்ணீர் மொள்ள வந்த ஒரு சமாரிய ஸ்திரீயிடம், “தாகத்துக்குத் தா” என்று கூறி, சிறிது நேரம் அவளுடன் உரையாடி, மக்கள் குடிக்கும் கிணற்றுத் தண்ணீருக்கும், அவர் கொடுக்கிற, “நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்று”க்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துரைத்தார் (யோவான் 4:14). உடனே அவள், “ஆண்டவரே,... அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும்” என்றாள். இயேசு தீர்க்கதரிசனமாக அவளுடைய பாவ வாழ்க்கையைக் குறித்துக் கூறினார். அந்த ஸ்திரீ அவரை, தீர்க்கதரிசியாகவும் மேசியாவாகவும் ஏற்றுக்கொண்டு, ஜீவ தண்ணீரைப் பெற்றுக்கொண்டாள்.

லூக்கா 19ஆம் அதிகாரத்தில் யூதனாகிய சகேயு, இயேசுவைக் காண விரும்பி, ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். இயேசு அவனை இறங்கச் சொல்லி, அவனுடன் அவன் வீட்டிற்குச் சென்றார் என்று காண்கிறோம். சகேயு இயேசுவிடம், தன் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுப்பதாகவும், ஒருவனிடத்தில் எதையாவது அநியாயமாய்

வாங்கினதுண்டானால் அதை நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துவதாகவும் கூறினபோது, இயேசு அவனைப் பார்த்து, "இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது..." என்று மகிழ்ச்சியுடன் கூறினார் (லூக்கா 19:9). ஆயக்காரனாகிய சகேயு, இரட்சிப்பின் ஊற்றாகிய இயேசுவை இரட்சகராக ஏற்று, பாவத்திலிருந்து மீட்பைப் பெற்றுக்கொண்டான்.

இவ்வாறு, தனிப்பட்ட நபர்களும், பாவ வாழ்க்கையை விட்டு மனந்திரும்பும் அநேகரும், இயேசு அருளும் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும்படியாக, பேயோரின் ஊற்றாகிய இயேசுவிடம் வருகின்றனர். இரட்சிப்பின் ஊற்று ஒரு நாளும் வற்றிப்போவதில்லை. அல்லேலூயா!

## உ. ஜீவன் — Life

"ஜீவன்" என்று கூறப்பட்டது எதுவென்றால், வற்றாத ஜீவ ஊற்றாகிய நித்திய ஜீவன் என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும். இயேசு தம்மைக்குறித்து, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்றாரல்லவா (யோவான் 14:6)? மனிதன் இவ்வுலகில் ஜீவிக்கும்படியாக ஜீவனை, அதாவது, சுவாசத்தைத் தேவன் கொடுத்திருக்கிறார். ஆனால், அது ஏதாவது ஒருநாள் அவனை விட்டு எடுபட்டுப்போகும். அப்பொழுது அவன் மரித்த சடலமாகிவிடுவான். ஆனால், இயேசு தம்மைக்குறித்துக் கூறின ஜீவன், காலவரையின்றி நித்தியகாலமாய் ஜீவிக்கும்படியாக நமக்கு அருளப்பட்டுள்ளது. நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும்படியாகத்தான் நாம் பாவ மன்னிப்பைப் பெற்று, தண்ணீரில் மூழ்கி, ஞானஸ்நானத்தில் தேவனோடு உடன்படிக்கை செய்கிறோம். நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த இரத்தத்தினால் கழுவப்படாவிடில், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வது சாத்தியமாகாது. நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படியாகத்தான் இயேசு சிலுவையில் தம் ஜீவனை ஊற்றினார். அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளுகிற ஒவ்வொருவரும் நித்திய ஜீவனை அடைவார்கள் என்பதை, யோவான் 3:16 இவ்வண்ணம் கூறுகிறது: "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."

எரேமியா 2:13இல், "ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை..." என்றும், எரேமியா 17:13இல், "...ஜீவனுள்ள தண்ணீரின் ஊற்றாகிய கர்த்தரை..." என்றும் கூறப்பட்டுள்ளது. அப்படியானால், ஜீவத் தண்ணீரின் ஊற்று, தேவனாகிய கர்த்தரே என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். நித்திய

ஜீவனைக் கொடுக்கும்படியாக, நித்திய காலமாக ஊறும் ஊற்றாகிய கர்த்தர், நமக்கு ஆவிக்குரிய ஆகாரத்தைத் தருகிறார்: "ஞானவான்களுடைய போதகம் ஜீவ ஊற்று" (நீதி. 13:14); கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை நாம் பெற்றுக் கொள்கிறோம்: "கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவ ஊற்று" (நீதி. 14:27); கர்த்தரோடு நித்திய நித்தியமாக ஐக்கியம்: "இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்" (வெளி. 21:3). இயேசுவாகிய ஜீவ ஊற்றைப் பெற்றுக்கொள்ள நமக்கு ஒரு தாகம் அல்லது வாஞ்சை இருக்கவேண்டும். வெளி. 21:6இல், இயேசு, "தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத் தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்" என்றல்லவா கூறுகிறார்? இயேசு நமக்கு ஜீவ ஊற்றாயிருப்பார். அவரோடு நாம் என்றென்றும் வாழுவோம்.

### 3. பரிசுத்தமாகுதல் — Sanctification

"அந்நாளிலே பாவத்தையும் அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஊற்று ஒன்று உண்டாயிருக்கும்" (சகரியா 13:1).

இவ்வாறு பரிசுத்தமாக்கப்படுதல் அவசியம் என்று, இரட்சிக்கப்பட்ட மக்களுக்குக் கூறப்பட்டுள்ளது. நாம் ஒன்றுகூடி தேவனை ஆராதிக்கவரும்போது, நாம் சுத்திகரிக்கப்பட வேண்டும். பரிசுத்தமான தேவனை, அவருடைய பரிசுத்த ஆலயத்தில் நாம் ஆராதிக்கும்போது, நம் இருதயம் பரிசுத்தமாக இருக்க வேண்டும். நாம் பாவத்திலிருந்தும், எல்லா விதமான அசுத்தமான காரியங்களிலிருந்தும், அநீதியிலிருந்தும் நீங்கி பரிசுத்தமாக்கப்பட, நமக்கு ஒரு திறக்கப்பட்ட ஊற்று உண்டாயிருக்கும் என்று, பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது, புதிய ஏற்பாட்டில், இயேசு கிறிஸ்துவில் நிறைவேறியுள்ளது. இயேசுவே அந்தத் திறக்கப்பட்ட ஊற்று. அவர் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறார்.

ஊற்றுத் தண்ணீர், ஒவ்வொருநாளும் புதிதாக ஊறிவரும் நீராயிருப்பதால், அது மிகவும் சுத்தமானதாயிருக்கும். சுத்தமான தண்ணீர்தான் அழுக்கைக் கழுவி சுத்தமாக்கக்கூடும். ஆகவேதான், இயேசுவாகிய திறக்கப்பட்ட ஊற்று, பாவத்திலிருந்தும் மாமிசீக அழுக்கிலிருந்தும் நம்மைத் தம்முடைய ஊற்றுத் தண்ணீரினால் கழுவி, பரிசுத்தப்படுத்தி வருகிறார். அவருக்கே மகிமை உண்டாவதாக.

# STRANGE PENTECOSTAL EXPERIENCES

Acts 2:1 begins with the words, "And when the day of Pentecost was fully come, they were all with one accord in one place." This proves that Pentecost is not a denomination which it is commonly believed to be in Christendom. In fact, it is one of the festivals celebrated by the children of Israel in the Old Testament period. The festival which was celebrated as the Feast of Weeks, also called the Feast of Harvest, and the Day of Firstfruits, was later known as Pentecost because it was celebrated on the 50th day from the sabbath beginning the Passover.

Jesus had already spoken to His disciples about going to heaven after His resurrection, and sending the Holy Spirit the Comforter to them (John 16:7). He told them that they would receive power after the Holy Spirit had come upon them, and they would be witnesses to Him in Jerusalem, Judaea and Samaria (Acts 1:8).

On the day of Pentecost the disciples had the unique experience of receiving the Holy Spirit, and since then they had to go through some strange experiences as well. Let us see what they were.

### 1. The disciples were mocked as drunkards — Acts 2:13

Since Jesus had commanded His disciples to wait in Jerusalem for the promise of the Father, namely, the outpouring of the Holy Spirit, about 120 of them waited in the upper room with one accord in prayer. It was the day of Pentecost, and on that day, something spectacular happened. As they were praying, suddenly there appeared cleft tongues of fire, and rested on all of them. Immediately, they were filled with the Holy Spirit, and began to speak in diverse tongues.

Many Jews had gathered in Jerusalem from the lands of diaspora, and they were amazed to hear the disciples who were

Galileans speak in their languages. Some of them mocked the disciples saying they were drunk. But, Simon Peter stood up and explained to them how it was prophesied in Joel 2:28 in the Old Testament that the Lord would pour His Spirit on all flesh, and how it was fulfilled on the day of Pentecost when all the 120 disciples were filled with the Holy Spirit and spoke in tongues.

**2. Hailed as gods in the likeness of men — Acts 14:11**

Paul and Barnabas went to Iconium, and preached in the synagogue of the Jews. A multitude of the Jews and the Greeks heard the gospel, and believed in the Lord Jesus Christ. But, the people were divided, some taking the side of the Jews, and others, joining the Gentiles. As Paul and Barnabas sensed a move to maltreat them and stone them with support from authorities, they escaped to the Lycaonian cities of Lystra and Derbe.

At Lystra, while Paul was preaching, a man who was a cripple from birth was listening to him. Paul saw that he had the faith to be cured, and commanded him to stand up on his feet. The lame man who had never walked in his life sprang up, and began to walk. When the crowd saw what Paul had done, they shouted in their native language, "The gods have come down to us in human form!" They called Barnabas Jupiter, and Paul, Mercurius because he was the chief speaker. The priest of Jupiter brought oxen and garlands, and he and the people were about to offer sacrifice. The people of Lystra considered Paul and Barnabas as gods in human form.

**3. Strange incidents leading to the salvation of the jailer and his family—Acts 16 : 16 - 34**

Apostle Paul and his companions were at Philippi to minister to the Lord. As Paul spoke, a lady by name Lydia listened to him intently, and took baptism with her household. When Paul and those who were with him were going to the

place where they usually gathered to pray, a woman with a spirit of divination who had brought large profits by fortune-telling kept following them saying that they were servants of the most high God who showed people the way of salvation. Paul commanded the spirit to come out of her, and she was delivered from it instantly. When the owners saw that their hope of profit had gone, they seized Paul and Silas and gave them over to city authorities who ordered them to the stripped, flogged and imprisoned. Their feet were put in stocks. About midnight Paul and Silas prayed and sang songs of praise to God. As the other prisoners were listening, suddenly there was a violent earth-quake which shook the foundations of the prison. The prison doors flew open and the fetters of all prisoners broke loose. The Jailer awoke from his sleep, and thinking that all the prisoners had escaped, was about to kill himself with his sword. Paul told him not to kill himself, and assured him that they were all there. The jailer took Paul and Silas out, and asked them what he should do to be saved. They told him to believe on the name of the Lord Jesus Christ, and he and his household would he saved. Paul and Silas spoke the Word of God to him and all those who were in his house. The jailer and his household were baptized. He took them to his house, gave them food and rejoiced.

The jailer's conversion is indeed a miracle which the Lord did in Paul's ministry.

**4. Ridiculed as those who turned the world upside down — Acts 17:6**

Wherever the apostle Paul and his companions went, there was opposition from the Jews, and persecution followed.

Paul preached in the synagogue of the Jews at Thessalonica. He used Scriptures to prove that Jesus, who was crucified and resurrected, was the Messiah, and many believed and joined Paul and Silas. Among them were devout Greeks, and also some leading women. But there were unbelieving Jews who felt jealous of Paul. They gathered some troblesome people, and

thinking that Jason had given Paul and Silas shelter, stormed his house, and tried to drag Paul and Silas out to the people. Not finding them there, they took Jason and some others to the rulers of the city, and informed them that those who had turned the world upside down had come there also. This is the third label with which those who had the Holy Spirit were identified.

From the time the disciples were filled with the Holy Spirit, it has been observed that those who spoke in tongues, as the Holy Spirit gave them utterance, were strange people, and they were generally spoken of as being peculiar in their behaviour. But, those who ridicule the ones who are anointed by the Holy Spirit commit a sin which cannot be forgiven. Jesus Himself has said, “And anyone who speaks against the Son of Man, it will be forgiven him; but to him who blasphemes against the Holy Spirit, it will not be forgiven" (Luke 12:10 - NKJV).

The Holy Spirit is the third part of the Trinity, the other two being, God the Father and God the Son Jesus Christ. In the Bible, the Holy Spirit is usually referred to as the Holy Ghost as we read in Acts chapter 2.

The function of the Holy Spirit is to comfort as well as guide people. Since the Holy Spirit is a person and not an invisible Spirit, He manifests Himself in forms such as, air, wind, fire, water, and oil, and when an individual receives the anointing of the Holy Spirit, he or she receives power from the Father in heaven, and the usual sign of the infilling of the Holy Spirit is, speaking in tongues. The illiterate disciples of Jesus spoke various languages which they did not know. Besides, God will give the anointed people the fruit of the Spirit and various gifts which will operate in their lives.

We are advised neither to grieve the Holy Spirit (Ephesians 4:30), nor to quench the burning fire of the Spirit (I Thessalonians 5:19).

# ஜெபிக்கும் சபை

ஜெபிக்கும் சபை என்பது ஜெப ஆவியால் நிறைந்த அங்கத்தினரைக் கொண்ட கூட்டம், ஜெபவீரராய்த் திகழும் விசுவாசிகளைக் கொண்ட சபை என்றும் கூறலாம், நாம் ஏன் ஜெபிக்கிறவர்களாய் விளங்கவேண்டும் என்பதற்கு, பேதுரு அப்போஸ்தலன் பதில் கூறுகிறார்.

"எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்" (1பேதுரு 4:7).

ஆம், நாம் கடைசி நாட்களில் பிரவேசித்துவிட்டோம். பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலம் மாத்திரம் உண்டென்று அறிந்து, பாதாளத்திலுள்ள பிசாசுகளை அவிழ்த்துவிட்டதுபோலக் காணப்படுகின்றது. பிசாசு தன் வாலினால் கிரியை செய்யும் காலம் இது. வாலுக்கு வல்லமை குறைவுதானே! என்று நாம் நினைக்கலாம். பிசாசு தன் முகத்தைக்காட்டி, பயப்படுத்தி, விசுவாசப் பாதையிலிருந்து விழத்தள்ளினவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும், தன் வாலினால் (தந்திரத்தினால்) விழத்தள்ளினவர்களின் எண்ணிக்கை அதிகம். பிசாசின் தந்திரங்களை ஜெயிக்க, ஜெபிக்கிற சபையாராய் நாம் திகழ வேண்டும்.

இத்தகைய ஜெபிக்கும் சபையைப் பற்றி அப்போஸ்தலர் 4ஆம் அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ளது. இந்தச் சபை ஆதித்திருச்சபையே. இச்சபையின் விசேஷித்த குணாதிசயங்களைக் காண்போம்.

ஜெபவேளையில் பேதுருவும், யோவானும் தேவாலயத்திற்குச் சென்றனர். அங்கே தேவாலய வாசலண்டையிலே பிச்சை கேட்டுக் கொண்டிருந்த, பிறவியிலேயே சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனிதனைக் கண்டு, அவனை இயேசுவின் நாமத்தினால் சுகப்படுத்தினர். இக்காரியத்தைக் கேள்விப்பட்ட ஆசாரியரும், தேவாலயத்தின் சேனைத்தலைவனும், சதுசேயரும் அவர்களிடத்தில் வந்து, அவர்களைப்பிடித்துக் காவலில் வைத்து, தண்டிக்க வகையொன்றும் காணாதவர்களாய் இயேசுவின் நாமத்தைக் குறித்து இனி பேசக்கூடாது என்று எச்சரித்து, விடுதலை செய்தனர்.

விடுதலையாக்கப்பட்ட அப்போஸ்தலர்கள் தங்கள் சபையாரிடத்தில் வந்து, நடந்த காரியத்தை அறிவித்தனர். இந்த வேளையில் ஜெபிக்கும் சபை செய்தது என்ன?

**ஜெபிக்கும் சபை ஜெபத்தையே முக்கியப்படுத்தியது :**

இச்சபையார் ஜெபித்த ஜெபம் அப்போஸ்தலர் 4:23 முதல் 30

வசனங்களில் அடங்கியுள்ளது. இச்சபையின் காலத்தில் குறுக்கிட்ட பிரச்சினை இது. தங்கள் சொந்த ஜனமான இஸ்ரவேலரும், புறஜாதிகளும், அபிஷேகம்பண்ணப்பட்ட ஊழியக்காரர்களுக்கு விரோதமாய் எழும்பினார்கள். இத்தகைய சூழ்நிலையில் சிக்கித் தவித்த சபையார், அதிகாரிகளது சிபாரிசைத் தேடிச்செல்லவுமில்லை, வேறு யாருடைய உதவியையும் நாடவுமில்லை.

ஜெபிக்கும் சபையார் செய்த ஒரே காரியம் ஜெபம். துன்பம், தொல்லை, பயங்கள், விரோதங்கள் ஆகிய சத்துருவின் கிரியை நம்மைச் சூழ்ந்து நெருக்கும் வேளையில் நாம் செய்வது என்ன? ஆதிச் சபையாரைப்போல ஜெபத்தை ஆயுதமாக எடுக்கிறோமா?

"இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்" (சங்கீதம் 34:6).

இக்கடைசி நாட்களில் தேவன் ஜெபத்தைக் கேட்க ஆவலாய் உள்ளார். அவர் தனி ஜெபத்தைக் கேட்கிறார். எப்படியும் தேவன் நல்லவர், தம்மை நோக்கிக் கூப்பிடுகிறவர்களை அவர் அறிவார். ஆகவே, நாம் தாழ்மையுடன் ஜெப ஆவிக்காகப் பிரார்த்திப்போம். ஜெபிக்கும் சபையாராய் மாறுவோம். இதுவே நம் ஜீவியத்தில் முக்கிய இடம் பெறவேண்டும்.

**ஜெபிக்கும் சபையில் ஒருமனது காணப்பட்டது:**

"அவர்கள் அதைக்கேட்டு, ஒருமனப்பட்டுத் தேவனை நோக்கிச் சத்தமிட்டு..." என்று எழுதப்பட்டுள்ளது (அப்போஸ்தலர் 4:24). நடந்த சம்பவத்தைக் கேட்டதும் திரள் கூட்டமாயிருந்த அச்சபையார் ஒருமனப்பட்டனர். அச்சபையில் ஒருமனம் இருந்தபடியால் ஜெப ஆவி கிரியை செய்தது. நம்மில் ஜெப ஆவி இல்லாவிடில் நம் சபையில் ஒருமனது இல்லை என்பது புலனாகும். எனவே, நாம் ஒவ்வொருவரும் தேவ சமுகத்தில் இருதயத்தை ஆராயக் கடமைப்பட்டுள்ளோம்.

எவரைக் குறித்தாவது கசப்பு, விரோதம் நம் உள்ளத்தில் காணப்படுகின்றதா என்று ஆராய்வோம். ஆவியானவர் நம்மிலுள்ள குறையைக் காட்டும்போது, முதலாவது அதை ஒத்துக்கொண்டு, பின்பு கர்த்தரிடமோ அல்லது மற்ற மனிதரிடமோ சென்று முறைப்படி மன்னிப்புக் கேட்கவேண்டும்.

பகை, கசப்பு இல்லாத கிறிஸ்தவரின் இருதயம் சுத்தமுள்ளது. தப்பெண்ணங்கள் நீங்கும்போது தேவன் நம்மில் பிரியப்படுவார். கசப்பு, தப்பெண்ணங்கள் நீங்கும்போது நம் எண்ணிக்கை திரள்

கூட்டமாயிருப்பினும் ஒருமனது ஏற்படும்; ஜெப ஆவி கிரியை செய்யும். ஜெப ஆவியைக்காட்டிலும் ஆசீர்வாதமான வரம் வேறு ஒன்றும் இல்லை. நாம் ஜெப ஆவி உள்ளவரென்று நம் பேச்சிலிருந்தே வெளிப்படும். நாம் துணிகரமான பாவம் செய்யாவிடினும் சபையின் ஒருமனம் தடையாயிருப்பதே பாவம். ஆகையால் நம் சபையில் ஒருமனம் ஏற்பட ஆவியானவரிடம் கேட்போமாக.

**ஜெபிக்கும் சபையில் ஒரே இருதயம் இருந்தது:**

"விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்" (அப்போஸ்தலர் 4:32).

ஒரே மனது என்று மாத்திரமல்ல, ஒரே இருதயம் என்றும் குறிப்பாகச் சொல்லப்பட்டுள்ளது. ஒருமனம் என்பதும் ஒரே இருதயம் என்பதும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை. ஒரே இருதயம் என்பது, ஒருவரின் இருதயம் மற்றவரின் இருதயத்தோடு இசைந்திருப்பது. ஆதிச்சபை விசுவாசிகளின் இருதயம் தேவ அன்பினால் நிறைந்திருந்ததால் அவர்கள் ஒரே இருதயமுள்ளவர்களாய் இருந்தார்கள். ஒருவருக்காக ஒருவர் பாரப்பட்டனர். பரலோகத்தில் இலட்சக்கணக்கானவர் ஒரே இருதயமுள்ளவர்களாய் இருப்பார்கள். இந்த ஒரே இருதயம் நம் சபையில் காணப்படுகின்றதா? ஒரே இருதயம் நம் குடும்பத்தில் காணப்படுகிறதா? பரிசுத்தவான்கள் இருதயத்தோடு நம் இருதயம் இசைந்து இருக்கின்றதா? இல்லையெனில் ஆவியானவரை எப்போதாவது துக்கப்படுத்தினேனா? ஆதி அன்பிலிருந்து விலகியுள்ளேனா? தேவனுக்கும் எனக்கும் இடையில் சிறிதளவாகிலும் பிளவு காணப்படுகின்றதா? என்று நம்மை நாமே பரிசோதிக்கக் கடனாளிகளாயுள்ளோம். ஒரே இருதயம் நம்மில் காணப்பட ஜெபிப்போமா?

**ஜெபிக்கும் சபையில் தேவ வல்லமையைப்பற்றிய வெளிப்படுத்தல் இருந்தது.**

"அவர்கள் அதைக்கேட்டு, ஒருமனப்பட்டுத் தேவனை நோக்கிச் சத்தமிட்டு, கர்த்தாவே, நீர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனாயிருக்கிறீர்" (அப்போஸ்தலர் 4:24).

இச்சமயத்தில் அச்சபையார் கேட்ட செய்தி, அவர்களைச் சத்தமிட்டு ஜெபிக்கச் செய்தது. இது அவர்கள் இருதயத்தின் உண்மையை வெளிப்படுத்துகிறது. நாம் அழுதும் ஜெபிக்கலாம். மகிழ்ந்தும் ஜெபிக்கலாம். சத்தமிட்டும் ஜெபிக்கலாம். மவுனமாயும் ஜெபிக்கலாம். இது

ஜெபிப்போரின் தன்மையையும் அவர்கள் இருக்கும் சூழ்நிலையையும் பொறுத்தது.

ஜெபிக்கும்போது சத்தமாய் ஜெபிப்பதினாலேயோ, மவுனமாய் ஜெபிப்பதினாலேயோ வல்லமை குறைவு என்று நினைக்கக்கூடாது. ஜெபிக்கும்போது மக்கள் தங்கள் சூழ்நிலைக்கு மேலாக தேவனின் வல்லமையை உணருகின்றனர். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவனால் முடியாத காரியம் ஒன்றுமில்லை என்று நினைக்கும் அதே வேளையில் தங்களைத் தேவ சமுகத்தில் தாழ்த்துகின்றனர்.

தன்னுடைய வெறுமையை உணர்வதே வெளிப்படுத்தல்களில் பிரதானமானது. நாமும் ஜெபிக்கும் வேளையில் தேவ வல்லமையை உணர்கிறோமா? தேவ சமுகத்தில் நம்மை வெறுமையாக்க முடிகின்றதா? இதற்காக ஜெபிப்போம். தேவ வல்லமையைப் பற்றிய வெளிப்படுத்தலைப் பெற தேவன் அருள்புரிவாராக!

**ஜெபிக்கும் சபை தேவ வாக்குகளைப் பற்றிக்கொண்டது:**

“தேவரீர் உம்முடைய தாசனாகிய தாவீதின் வாக்கினால் உரைத்தீரே” என்று, சூழ்நிலைக்கு ஏற்ப 2ஆம் சங்கீதம் முதல் நான்கு வசனங்களை வாக்காகப் பிடிக்கின்றனர். இதில், “ஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதாக்காரியத்தைச் சிந்திப்பானேன்?” என்ற இவ்வாக்கைப் பிடித்து, ஜனங்களின் விரோதம், பகை, சத்துருவின் கிரியைகள் யாவும் விருதா என்பதை மனதில் எடுத்தனர்.

நம் இனத்தார், சிநேகிதர் நமக்கு விரோதமாய் எழும்பும்போது, கர்த்தரின் வாக்குப்படி அவையாவும் விருதா என்று உணருகிறோமா? மேலும், ‘‘கர்த்தருக்கு விரோதமாகவும் அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும்’’ என்று வசனம் கூறுகிறது. இவ்வசனத்தில், “அபிஷேகம் பண்ணப்பட்டவர்” என்று கூறப்பட்டுள்ளது இயேசுவைக் காட்டுகிறது.

இயேசுவுக்கு உரிய வாக்குத்தத்தத்தை நினைவுகூரும்போது பயபக்தியுடனும், வாக்குரைத்தவர் நிறைவேற்ற வல்லவர் என்ற விசுவாசத்துடனும் ஜெபிக்கவேண்டும். நம் சூழ்நிலைக்கு ஏற்ற வாக்குத்தத்தம் வேதத்தில் உண்டு.

இவ்வாறு வேத வாக்குத்தத்தங்களைப் பிடித்து ஜெபிக்க வேத அறிவு அவசியம். வேத வாக்குகளைப் பற்றிக்கொண்டு ஜெபிக்கக் கற்றுக்கொள்வோமாக.

**ஜெபிக்கும் சபை இயேசுவின்மேல் அன்பு செலுத்தியது:**

“ஏரோதும் பொந்தியுபிலாத்தும், புறஜாதிகளோடு இஸ்ரவேல் ஜனங்களோடுங்கூட, நீர் அபிஷேகம்பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு விரோதமாய், மெய்யாகவே கூட்டங்கூடினார்கள்” (அப்போஸ்தலர் 4:28).

‘‘உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசு’’ என்று சொல்லுகின்றனர். இயேசுவின் பேரில் அன்பினால் நிறைந்திருந்தபடியால் இயேசு யாரென்று அவர்களுக்குத் தெரியும். தங்களுக்கு விரோதமாய்ப் பகைவர் எழும்பினதையும் நினைத்து வருத்தப்படாமல், ஆத்துமநேசராகிய இயேசுவுக்கு விரோதமாய் எழும்பியுள்ளார்களே என்று வருந்துகின்றனர்.

இயேசுவின் பேரில் இத்தகைய அன்பு நமக்கு உண்டா? நான் வெட்கம் அடைந்தாலும், நான் தூஷிக்கப்பட்டாலும், நான் மரித்துப்போனாலும் கவலையில்லை. இயேசுவின் நாமம் தூஷிக்கப்படக்கூடாதே என்று எண்ணுகிறோமா?

இரட்சிக்கப்படாத ஒரு ஆத்துமாவிற்காக ஜெபிக்கும் வேளை அந்த ஆத்துமாவின் மூலம் இயேசுவின் நாமம் தூஷிக்கப்படக்கூடாது என்ற ஒரே குறிக்கோளுடன்தானா ஜெபிக்கிறோம்? இல்லையெனில், நாம் இயேசுவின்பால் அன்பு செலுத்தவில்லை என்பது புலனாகும். இயேசுவின் அன்பினால் நிறைந்து, அவர் நாமம் தூஷிக்கப்படாதபடி ஜீவிப்போம்.

**ஜெபிக்கும் சபை அற்புதங்களை எதிர்பார்க்கும் :**

“உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி, உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருளும் என்றார்கள்” (அப்போஸ்தலர் 4:30).

ஜெபிக்கும் சபை எப்பொழுதும் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்கிற சபையாகத் திகழும். ஏனெனில், ஜெபிக்கும் சபை அற்புதங்களை விரும்பிக்கேட்டு, தேவன் அற்புதங்களை நிகழ்த்த வல்லவர் என்ற எதிர்பார்ப்போடு பெற்றுக்கொள்கின்றனர். ஜெபிக்கிற சகோதர சகோதரிகளாகிய நாமும் நம் வீடுகளில் தேவனின் கையின் கிரியையாகிய அற்புதங்களுக்காக ஜெபித்து அனுபவிக்கவேண்டும். அன்று ஆதித்திருச்சபையில் அற்புதங்களை நிகழ்த்தினவர், இன்றும் செய்ய வல்லவராய் இருக்கின்றார்.

**ஜெபிக்கும் சபையார் தைரியமாக சுவிசேஷத்தை அறிவிப்பார்கள்:**

"...உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருளும் என்றார்கள்" (அப்போஸ்தலர் 4:30).

தங்களுக்கு மரணம் நேரிட்டாலும் இயேசுவின் சுவிசேஷம் பரவவேண்டும் என்பதே ஆதிச்சபையின் விருப்பமாயிருந்தது. பேதுருவும் யோவானும் அதிகாரிகளினால் ஏற்பட்ட பயத்தினால் சுவிசேஷத்தை மறைக்கக்கூடாதே என்று பயந்து, அவர்களுக்காக ஜெபிக்கின்றனர்.

தேவ ஊழியக்காரராகிய நாமும் தைரியத்தோடே உண்மையை உண்மை என்றும், பொய்யைப் பொய் என்றும் ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்துகிறோமா? தேவனின் சுவிசேஷத்தைத் தைரியமாகச் சொல்வதற்குத் தேவையான கிருபைக்காக தேவனிடம் ஜெபிப்போமாக.

**ஜெபிக்கும் சபை பெந்தெகொஸ்தே அனுபவத்தைப் பெற்றது:**

"அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு..." (அப்போஸ்தலர் 4:31).

ஜெபிக்கும் சபை, பெந்தெகொஸ்தே அனுபவத்தை ஒருமுறை மாத்திரம் அல்ல, அடிக்கடி அனுபவிக்கும். நாம் ஜெபிக்கும்போது நம் உள்ளத்தில் பரிசுத்த ஆவியானவர் இறங்கி கிரியைசெய்ய விடவேண்டும். இத்தகைய பரிசுத்த ஆவியானவரின் அசைவைத் தினமும் பெற்று அனுபவிக்க நாம் எப்போதும் ஜெபிப்போமாக.

**ஜெபிக்கும் சபை ஒன்றிலும் குறைவுபடாது:**

"...அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை" (அப்போஸ்தலர் 4:35).

மேலே சொல்லப்பட்ட குணாதிசயங்களை உடையவர்களாய் நாம் இருப்போமானால் நமக்கு ஒன்றும் குறைவுபடாது. நம் வீடுகளில் ஆவிக்குரிய திருப்தி, சமாதானம் காணப்படும். ஆண்டவரின் கிருபையால் ஆன்மீக நன்மைகளிலும், சரீர நன்மைகளிலும் ஒரு குறைவும் இல்லை என்று கூறுவோம்.

எனவே, மேலே கூறப்பட்ட ஒன்பது குணாதிசயங்களையும் நம் ஜீவியத்தின் நிபந்தனைகளாய் எடுத்துக்கொண்டு ஜெபிப்போமானால், நிச்சயம் நம் வீடுகளில் ஒன்றும் குறைவுபடாது. குறைவற்ற கிறிஸ்தவர்களாய் ஜீவிக்க தேவன் அருள்புரிவாராக. அல்லேலூயா!

# நிருபனின் நிருபம்

"ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் ஒப்பற்ற நாமத்தில் கிருபையின் மன்னா வாசகர்களுக்கு எனது உளம் கனிந்த வாழ்த்துக்கள். தேவகிருபையால் இன்னுமொரு மாதத்திற்குள் இனிதே பிரவேசிக்கச் செய்த தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம். காலங்கள் வேகமாய் உருண்டோடுகிற நிலையில், கால நிலைகளின் தீவிர மாற்றங்களையும் இயற்கையின் சுற்றுச் சூழலில் நாம் கண்டு உணரமுடிகிறது. இதன் மூலம் நமது இரட்சகராம் இயேசுவின் வருகை எவ்வளவு சமீபம் என்பதை நாம் திட்டவட்டமாய் அறியமுடிகிறது. கர்த்தர்தாமே தமது தீவிர வருகைக்கு நம் ஒவ்வொருவரையும் ஆயத்தமாக்குவாராக.

நாம் இன்னும் சோம்பேறிகளாய் இராமல், கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக்காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்து வைக்கும் எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள்வோமாக (நீதிமொழிகள் 6:6-8).

இக்கோடை விடுமுறை நாட்களை, நாமும், நமது குடும்பமுமாக பயனுள்ள நிலையில் கழிப்போமாக. உங்கள் பிள்ளைகளை, உங்கள் சபையிலோ அல்லது அருகிலுள்ள திருச்சபைகளிலோ நடைபெறும் விடுமுறை வேதாகமப் பள்ளிக்குத் தவறாமல் அனுப்பிவையுங்கள். இயேசுவானவரைப்போல அவர்கள் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைவார்களாக (லூக்கா 2:52). கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே அவர்களை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவர்களாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, தங்கள் சிறுவயது முதல் நமது பிள்ளைகள் அறிந்து கொள்ள அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்து மகிழுங்கள் (11 தீமோத்தேயு 3:15).

பத்திரிகை ஊழியத்திற்காகத் தொடர்ந்து ஜெபியுங்கள். இன்னும் அநேகர் இவ்வூழியத்தின்மூலமாய் ஆசீர்வாதம் பெற மற்றவர்களுக்கும் இதை அறிமுகம் செய்யுங்கள். மேலும் ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட இரகசியமாகிய தேவவசனத்தைப் பரிபூரணமாய்த் தெரியப்படுத்துகிறதற்கு, தேவன் எனக்குக் கிருபை தர எனக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள் (கொலோசெயர் 1:25). தூய ஆவியின் நிழல் உங்கள் மேல் நிழலிடுவதாக.

சிலுவையின் நிழலில்
அன்பரின் ஊழியன்
**எஸ். ஆனந்த்**
**(S. Anand)**

## SMOOTH STONES FROM THE BROOK

**Luke 22:31-32: And the Lord said, Simon, behold Satan hath desired to have you, that he may sift you as wheat: But I have prayed for thee, that thy faith fail not...**

Our Lord Jesus prayed for Peter that his faith might not fail, and within a few hours his courage did fail.

The more we think of those last hours of our Lord, just before Calvary, the more we see every kind of trial compressed into them. It was not only that His cup was filled to overflowing with suffering, but that every variety of suffering was there. It is easy to escape from the intolerable thought of such suffering by saying He was God, and so, where Peter was concerned, He looked forward to the victory that would be given. But we know, though we cannot understand it, that He was man too, and Hebrews 2:18 says that He *suffered* being tempted.

Is there one for whom we are praying, who seems to be unhelped by our prayer? Are we suffering the bitterness of disappointment? Our dear Lord has been this way before us. He who turned and looked upon Peter (Luke 22:61) will give to us, will maintain in us, His own tenderness of spirit, the love that cannot be tired out of loving, the patience that will not let go.

*If undelivered please return to*

**A.C.A. K.K. Nagar Ministry,**
**No. 50, Kannigapuram 1st Street, K.K. Nagar, Chennai - 600 078.**
**Phone : 044-2366 2677 / Cell : 9444141944**
**Email : sanandaca@gmail.com**

L.R. Graphics, Ph : 2489 5236